இந்திய உச்ச நீதிமன்றம்

[2021] 7 எஸ்.சி.ஆர். 1123

ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

எதிர்

கிரசன்ட் எஜுகேஷனல் சொசைட்டி மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 6931/2021)

நவம்பர் 18, 2021

[மாண்புமிகு நீதியரசர் டாக்டர் திரு. தனஞ்சய ஒய் சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ். போபண்ணா]

கல்வி / கல்வி நிறுவனம் –இணைப்பு அனுமதி வழங்குதல் - ஒருமுறை அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தில் ஒப்புதல் அளித்திருந்தாலும், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம் மாநில அரசாங்கத்தால் தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டால்தான் அதன் இணைப்பு அனுமதி வழங்க இயலும் என்று கணிக்க இயலாது - ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (ஜேஎன்டியு) அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தால் ஒப்புதல் அளித்தும் தற்போதுள்ள கல்லூரிகளில் புதிய படிப்புகளுக்கு இணைப்பு வழங்குவதற்கு முன் மாநில அரசின் ஒப்புதலை கோரியது - எனினும் உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவுகளை பிறப்பித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இரண்டாவது சுற்று

கலந்தாய்வில் பங்கேற்க அனுமதித்தது - அந்த உத்தரவினை எதிர்த்து - **தீர்வு:** உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்த தருணத்தில், மாநில அரசின் தடையில்லா சான்றிதழோ அல்லது ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் இணைப்போ வழங்கப்படவில்லை - வழக்கு நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போது, மாநில அரசு தடையில்லா சான்றிதழை வழங்கியது - இணைக்கும் செயல்முறை நடவடிக்கைகள் ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படவேண்டும் - இந்த பின்னணியில், உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கக் கூடாது - அத்தகைய உத்தரவு இறுதியில் இணைப்பு மறுக்கப்படும் பட்சத்தில் மாணவர்களை, பெரும்பாலும், மீளமுடியாத வகையில் பாதித்து கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் - இப்போது மாநில அரசு தனது தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது மற்றும் ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைப்பு செயல்முறையை நடத்த விருப்பம் என தெரிவித்துள்ளது - இணைப்பு செயல்முறை நடவடிக்கைகள் முடிந்தவுடன் உயர்நீதிமன்றம் விண்ணப்பித்த ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் முடிவுகளை முறையாக தெரிவிக்க இயலும் - இதற்கிடையில், இணைப்புச் செயல்முறையின் இறுதி முடிவிற்கு கட்டுப்பட்டு இடைக்கால உத்தரவுகள் நிறுத்தி வைக்கப்படுகிறது - ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் விதிமுறைகள் - விதிமுறைகள் 5.5, 5.6 மற்றும் 6.1.

ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளை எதிர் *ஆணையர் & அரசு உயர்கல்வித் துறை செயலாளர், திருவனந்தபுரம், கேரள மாநிலம் மற்றும் மற்றும் ஒருவர்* (2000) **5 எஸ்சிசி** 231: [2000] **2 எஸ்சிஆர்** 1234: *ஜவஹர்லால் நேரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பதிவாளர்*

எதிர் *சங்கம் லக்ஷ்மி பாய் வித்யாபீட் மற்றும் பலர்* **(2019) 17 எஸ்சிசி 729 : [2018] 14 எஸ்சிஆர் 103 மற்றும்** ஏ பி ஜே அப்துல் கலாம் *தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் ஒருவர்* எதிர் *ஜெய் பாரத் மேலாண்மை மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் கல்லூரி மற்றும் பலர்* **(2021) 2 எஸ்சிசி 564 - அதனை சார்ந்துள்ளது.**

வழக்கின் சட்ட குறிப்பு

[2000] 2 எஸ்சிஆர் 1234	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 2**
[2018] 14 எஸ்சிஆர் 103	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 12**
(2021) 2 எஸ்சிசி 564	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி 13**

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீட்டு எண். 6931/2021.

ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கானா உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண். 26590/2021 ல் 26.10.2021 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள். 6932- 6942, 6948 - 6952/2021 -யின் அடிப்படையில் உரிமையியல் மேல்முறையீடு எண். 6931/ 2021.

சி. எஸ். வைத்தியநாதன் மூத்த வழக்கறிஞர், பி. வெங்கட் ரெட்டி, ராமச்சந்தர் கவுட், தர்மேஷ், பிரசாந்த் தியாகி, பி. ஸ்ரீனிவாஸ் ரெட்டி ஆகியோர் தி/ள். வெங்கட் பால்வாய் லா அசோசியேட்ஸ் ஆகியோர் மேல்முறையீட்டாளர்களுக்காக.

எஸ். நிரஞ்சன் ரெட்டி, மூத்த வழக்கறிஞர், டி. அபினவ் ராவ், தருண் ரெட்டி, ராவி வெங்கட யோகேஷ், ஜி. தருண் ரெட்டி, அபிஷேக் சர்மா ஆகியோர் எதிர்மனுதாரர்கள் சார்பாக.

இந்நீதிமன்றத்தின் உத்தரவானது, கீழ்கண்டவாறு பிறப்பிக்கப்பட்டது.

<u>உத்தரவு</u>

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. தெலுங்கானா உயர்நீதிமன்றம், அதன் 5 அக்டோபர் 2021, 25 அக்டோபர் 2021 மற்றும் 26 அக்டோபர் 2021 தேதியிட்ட இடைக்கால உத்தரவுகளில், ஏற்கனவே அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு இயங்கி வரும் நிறுவனங்களில் உள்ள புதிய படிப்புகளுக்கு இணைப்பு வழங்கிட மாநில அரசின் அனுமதியை கோருவது. **ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளை** எதிர் **ஆணையர் & அரசு உயர்கல்வித்துறை செயலாளர், திருவனந்தபுரம், கேரள மாநிலம் மற்றும் ஒருவர்** என்ற வழக்கில் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிரானது ஆகும். அதன் விளைவாக உயர் நீதிமன்றம் ஜவஹர்லால்

நேரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களை படிப்புகளில் சேர்ப்பதற்காக இரண்டாவது கட்ட கலந்தாய்விற்கான நிறுவனங்களை அறிவிக்க உத்தரவிட்டது. பல நிறுவனங்கள் அகில இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுமதியை கோரியது மட்டும் இல்லாமல், பொறியியலின் "வளர்ந்து வரும் பகுதிகளில்" உட்கொள்ளும் திறனை மேம்படுத்துதல் அல்லது புதிய படிப்புகளுக்கு அனுமதி கோரி அதற்கு அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகம் ஒப்புதல் வழங்கப்பட்டது.

3. ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம், 08.09.2021 ஆம் தேதியன்று தொழில்நுட்ப கல்வி ஆணையருக்கு மாநில அரசின் அனுமதி புதிய படிப்புகளுக்கும், 2021-2022 ஆண்டுக்குரிய இளங்கலை பட்டப்படிப்பில் சேர்க்கைகான இடங்களை அதிகப்படுத்த வேண்டியும், கடிதம் எழுதியது. புதிய சேர்க்கைகளை அதிகப்படுத்துவது என்பது ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழக உண்மை கண்டறியும் குழுவின் தகுதி வாய்ந்த நபர்களின் சரிபார்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றிற்கு உட்பட்டது ஆகும்.

4. 11.09.2021 ஆம் தேதியன்று தொழில்நுட்ப கல்வி ஆணையர் உயர் கல்வி (தொழில்நுட்ப கல்வி) துறை, செயலாளர் அவர்களுக்கு புதிய படிப்புகளுக்கும், 2021-2022 ஆண்டுக்குரிய இளங்கலை பட்டப்படிப்பில் சேர்க்கைகான இடங்களை அதிகப்படுத்த வேண்டியும், அரசின் அனுமதி கோரி கடிதம் எழுதினார்.

5. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு தொகுதி மனுக்கள் ஒருமுறை அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும்

பொழுது, மாநில அரசின் தடையில்லா சான்றிதழை பெற்று இணைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இணைப்பு வழங்க அனுமதி இல்லை என தொடரப்பட்டுள்ளது. இடைக்கால உத்தரவை பிறப்பிக்கும் போது இந்த சமர்ப்பிப்பு உயர் நீதிமன்றத்தின் கருத்தில் கொள்ளப்பட்டது. மேற்சொல்லப்பட்ட **ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளை** (மேற்படி) வழக்கில், இந்த நீதிமன்றம் வழங்கிய முடிவுகள் நிறுவனங்களுக்கு ஆதரவாக இருக்கும் என உயர்நீதிமன்றம் கருதியது. எனவே இடைக்கால உத்தரவுகளை பிறப்பித்தது. உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுகளை தற்போது ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கேள்விக்குறியாக்கியுள்ளது.

6. ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் சார்பில் மூத்த வழக்கறிஞர் திரு.சி.எஸ்.வைத்தியநாதன் ஆஜரானார். கல்வி நிறுவனங்களின் சார்பில் மூத்த வழக்கறிஞர் திரு. எஸ். நிரஞ்சன் ரெட்டி ஆஜரானார்.

7. ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட சமர்ப்பணம் என்னவென்றால், ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் விதிமுறைகள் மாநிலத்தின் பங்கை வெளிப்படையாகக் கருதுகின்றன. மாநில அரசின் தடையில்லா சான்றிதழ் பெறுவதன் நோக்கம் சம்பந்தப்பட்ட பகுதியின் தேவைகள், கூடுதலான சேர்க்கைகள் மாநிலத்தின் ஒட்டுமொத்த கொள்கைக்கு இசைவானதாக உள்ளதா என்பதை பரிசீலனை செய்வதற்கு ஆகும். ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளையில், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு பின்னர் பல முடிவுகளில் பரிசீலிக்கப்பட்டது.

ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் வழக்கு உட்பட இந்த நீதிமன்றத்தின் அடுத்தடுத்த தீர்ப்புகளில் மாநில அரசின் பங்கின் முக்கியத்துவம் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், உயர்நீதிமன்றம் மாநில அரசு தடையில்லா சான்றிதழ் கொடுக்காத நிலையிலும், இணைப்பு நடவடிக்கை முழுமை பெறாத நிலையிலும், மாணவர்களின் கலந்தாய்வு குறித்து பிறப்பித்த இடைக்கால உத்தரவு ஏற்புடையதல்ல என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. திரு. சி.எஸ். வைத்தியநாதன் அவர்களின் வாதம், விவாதத்தின் போது பரிசீலிக்கப்படும்.

8. மறுபுறம், திரு.எஸ்.நிரஞ்சன் ரெட்டி, கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதாவது ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகம் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாநில அரசின் தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும் என்ற ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் வலியுறுத்தலின் அடிப்படையை முன்னிறுத்தினார். கற்றறிந்த மூத்த வழக்கறிஞர், ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் இணைப்பு நடவடிக்கைகளின் சட்ட அதிகாரத்தை மறுக்கவில்லை. ஆனால், அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தால் த்திற்கு ஒரு முறை அங்கீகாரம் வழங்கப்பட்ட நிலையில், மேலும் ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகம், மாநில அரசின் தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும் என்பது மத்திய அரசு அகில இந்திய தொழில்நுட்ப கழகத்திற்கு வரையறுக்கப்பட்ட சட்டத்திற்கு முரண்பட்டதாகும்.

9. ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் நிர்வகிக்கும் விதிமுறைகள் 5.5, 5.6 மற்றும் 6.1 முதலியவற்றை கவனத்தில் கொள்வது முக்கியமானவை . எனவே அவை பின்வருமாறு: -

5.5 தற்போதுள்ள கல்லூரி / நிறுவனம் ஒப்புதல் பெற்ற பிறகு / அகில இந்திய தொழில் நுட்ப கல்வி கழகத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்கும்போது மாநில அரசிடமிருந்து தேவையான அனுமதியை பெற வேண்டும். பிறகு, கல்லூரி / நிறுவனம் பல்கலைக்கழகத்தில் இணைவதற்கு இணையதளம் மூலம் பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட தேதிக்கு முன் ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்வி ஆண்டிற்காக விண்ணப்பிக்கலாம். குறிப்பிட்ட தேதிக்கு பின்பு இணைப்பு வழங்குவதற்கான விண்ணப்பம் பரிசீலிக்கப்படாது. எனினும், பல்கலைக்கழகத்தால் இணைப்பு வழங்குவது என்பது அகில இந்திய தொழில்நுட்ப பல்கலைக்கழகம்/மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

5.6 புதிய கல்லூரிகள் திறக்க அனுமதி வழங்குவதற்கும், புதிய திட்டங்களை தற்போதுள்ள கல்லூரிகளில் தொடங்குவதற்கும், மாநில அரசின் முன்னுரிமை/கொள்களுக்கு உட்பட்டு பல்கலைக்கழகத்தால் பரிசீலிக்கப்படும். எனவே, புதிய கல்லூரிகளை

தொடங்குவதற்கும், திட்டங்களை தொடங்குவதற்கும் மாநில அரசின் அனுமதி பெற வேண்டும்.

6.1 சேர்க்கை அதிகரிப்பு / பாடநெறியை நீக்குவதற்கு அல்லது கல்லூரி / நிறுவனம் / பெயர் மாற்றம் / தளம் / இருப்பிடம் மாற்றம் அல்லது வேறு எந்த விஷயத்திலும் பல்கலைக் கழகம் தடையில்லா சான்றிதழ் தேவை எனில் சங்கம்/மேலாண்மையிலிருந்து தீர்மானம் பெற்றிருக்கவேண்டும். மேலும், ஒரு புதிய பாடநெறி தொடங்குவதற்கு / சேர்க்கை அதிகரிப்பு / தற்போதுள்ள கல்லூரி / நிறுவனத்தின் தளம் / இருப்பிடம் மாற்றம் செய்ய மாநில அரசின் முன் அனுமதி கட்டாயமாகும்.

10. விதிமுறை 5.5 ஆனது, அகில இந்திய தொழில் நுட்ப கல்வி கழகத்தின் அங்கீகாரத்தை பெற்ற பிறகோ அல்லது ஒப்புதலுக்காக காத்திருக்கும்போதோ மாநில அரசின் அனுமதியை தற்போதுள்ள கல்லூரி மற்றும் நிறுவனங்கள் பெறவேண்டும் என வெளிப்படையாக கூறுகிறது. பின்னர், நிறுவனங்கள் ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட தேதிக்கு முன் இணையதளம் மூலம் இணைப்புக்கு விண்ணப்பிக்கலாம். விதிமுறை 5.6 ஆனது, புதிய கல்லூரிகளை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே உள்ள கல்லூரிகளில் புதிய திட்டங்களை தொடங்குதல் ஆகியவைகளுக்கு மாநில அரசின் கொள்கை / முன்னுரிமைக்கு ஏற்ப ஜவஹர்லால் நேரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தால் பரிசீலனை செய்யப்படும் என சுட்டிக்காட்டி மாநில அரசின் முன்

அனுமதி தேவை என கூறுகிறது. அதேபோல், விதிமுறை 6.1 ஆனது, மாநில அரசின் முன் அனுமதியை ஒரு புதிய பாடத்திட்டத்தைத் தொடங்க அல்லது ஏற்கனவே உள்ள பாடநெறி சேர்க்கைத் திறனை அதிகரிக்க முன் அனுமதி பெறுவது கட்டாயம் என்று கூறுகிறது.

11. இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் மாநில அரசின் பங்கு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், இரண்டு தீர்ப்புகளை கவனிக்கவேண்டும். குறிப்பிடத்தக்க வகையில், நாம் குறிப்பிடுவது போல், மேற்சொன்ன ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளையின் (மேற்படி) முந்தைய முடிவு, உயர் நீதிமன்றமும் பரிசீலித்துள்ளது.

12. **ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகப் பதிவாளர்** எதிர் **சங்கம் லக்ஷ்மி பாய் வித்யாபீட் மற்றும் பலர்** என்ற வழக்கில், இரு நீதிபதிகள் கொண்ட அமர்வானது, புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதற்கு முன் அனுமதி தேவை என கூறும் தெலுங்கானா கல்வி சட்டம் , 1982 யின் பிரிவு 20 ஐ பின்வருமாறு இந்நீதிமன்றம் பரிசீலித்தது :

> 14. பிரிவு 20(1)னை மேலெழுந்தவாரியாக படிக்கும்பொழுது, புள்ளிவிபரம் கணக்கீடு செய்தால் குறிப்பிட்ட பகுதியில் கல்வித்தேவையானது அப்பகுதியில் எத்தனை நிறுவனங்கள் இயங்கி வருகிறது என்பதையும் மற்றும் புதிய நிறுவனங்களின் தேவை/தற்போதுள்ள கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகளுக்கான தேவைகள் ஆகியவற்றை அடையாளம் காண இயலும் என்பது தெளிவாகிறது. பிரிவு 20(3)(ஏ)(i) ன்படி கல்வி முகமைகள் உள்ளூர் மக்களின் கல்வி தேவையை தன்னிறைவு செய்யவேண்டும்.

ஒருவேளை ஏற்கனவே அப்பகுதியில் நிறைய கல்வி நிறுவனங்கள் இருப்பின், தகுதி வாய்ந்த அமைப்பானது தடையில்லா சான்றிதழை புதிய நிறுவனங்களுக்கு வழங்காமல் இருப்பது நியாயமாக இருக்கலாம்.

15. பிரிவு 20 ல் உள்ள ஏற்பாடுகள், இப்பகுதியின் கல்வித் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நிறுவனங்களின் அதிகப்படியான வளர்ச்சியையும், பாடப்பிரிவுகளில் அதிகப்படியான வளர்ச்சியையும் தடுப்பதற்காக ஆகும். ஒருவேளை நிறுவனங்கள் ஒவ்வொரு பாடப்பிரிவுகளையும் நடத்த அனுமதிக்கப்பட்டால், அது கல்வியின் தரத்தை பாதிப்பதாக அமையும். ஏற்கனவே, நன்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நிறுவனங்களில் பற்றாக்குறையாக உள்ளனர். ஹைதராபாத்தில் உள்ள மருந்தக படிப்புக்கு உள்ள சேர்க்கை இடங்களை குறைத்த பின்னரும் அந்த இடங்கள் ஆண்டுதோறும் வெற்றிடமாகவே உள்ளன. அந்த வெற்றிடங்களில் போதுமான மாணவர்கள் இல்லாததால் 10 காலியிடங்களை நிரப்ப முடியவில்லை. ஹைதராபாத் மாநகரில், ஏற்கனவே 30 நிறுவனங்கள் மருந்தியல் பாடப்பிரிவை நடத்தி வருவதால் தடையில்லா சான்றிதழை பல்கலைக்கழகம் வழங்க மறுத்தது முழுமையாக சரியானது ஆகும்.

16. பிரிவு 20-யில் உள்ள விதிகள் தவிர, விதிமுறைகள் 5.2 மற்றும் 5.3 ஐ நாங்கள் பரிசீலனை செய்யும் பொழுது புதிய கல்லூரிகள்

பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொழில்நுட்ப கல்வியை வழங்க முன்வரும்போது முதலில் தடையில்லா சான்றிதழை பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்ற பின்புதான், அகில இந்திய தொழில் நுட்ப கழகம்/ இந்திய மருந்தியல் கவுன்சில் / மற்ற சட்ட பூர்வமான அமைப்புகளில் விண்ணப்பிக்க வேண்டும். விதிமுறை 5.3 ஆனது, புதிய பாடப்பிரிவுகளை தற்போதுள்ள கல்லூரிகளில் தொடங்க அனுமதி கோரும்போது அதனை பல்கலைக்கழகமானது மாநில அரசின் முன்னுரிமை/கொள்கைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேற்சொன்னவைகளை ஆராய்ந்ததன் அடிப்படையில். உயர்நீதிமன்றம், மாநில அரசிற்கு கொள்கைகளை வகுக்க அனுமதி இல்லை என்றும், ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் தன்னுடைய தடையில்லா சான்றிதழை வழங்க கடமைப்பட்டுள்ளது என பிறப்பித்த உத்தரவை தவறு என்று நீதிமன்றம் கூறியது.

13. சமீபத்திய இந்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, **ஏ பி ஜே அப்துல் கலாம் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் ஒருவர்** எதிர் **ஜெய் பாரத் மேலாண்மை மற்றும் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் பலர்** என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பில், மாநில அரசு மற்றும் இணைக்கப்பட்ட பல்கலைகழகத்தின் பங்கு குறித்து வலியுறுத்தப்பட்டது மற்றும் மாநில அரசானது அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட தகுதிபாடுகளை விட அதிகமான தகுதிபாடுகளை

பரிந்துரைக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது என கருத்தில் கொள்ளப்பட்டது. அதற்கு பிறகு **ஜெயா கோகுல் கல்வி அறக்கட்டளை** என்ற வழக்கில், இது பின்னர் வேறுபடுத்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றமானது, அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தின் விதிமுறைகள் அறிவிக்கப்பட்ட பிறகு, அங்கீகாரத்தினை நீட்டிக்க விண்ணப்ப படிவங்கள் இணையதள வாயிலாக சுய வெளிப்பாடு அடிப்படையில் செயல்படுத்தப்படவேண்டும் என உணர்ந்தது. எனவே, இணைப்பு நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் அதீத கவனத்துடன் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக அவசியமானதாகும் .

14. இதன் பின்னணியில், உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்த போது. மாநில அரசின் தடையில்லா சான்றிதழையோ அல்லது ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைப்பு அனுமதியையோ தரவில்லை. இவ்வழக்கு, நிலுவையில் இருக்கும் போது தெலுங்கானா அரசின் உயர் கல்வித்துறையானது, 01.11.2021 ஆம் தேதியன்று தன்னுடைய தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது. இணைப்பு செயல்முறையானது, ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் இன்னும் முடிக்கப்படவில்லை. இந்த நிலையில், உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களை இரண்டாவது சுற்று கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்க இடைக்கால உத்தரவினை வழங்கியிருக்கக்கூடாது. அந்த உத்தரவானது, இணைப்பு நடவடிக்கைகள் முடிவதற்கு முன்னரே அத்தகைய நீதித்துறை ஆணை பிறப்பிக்கப்பட்டதால், ஒருவேளை இணைப்பு மறுக்கப்படும் போது மாணவர்களுக்கு மீள இயலாத பாதிப்பை ஏற்படுத்தும். உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் படி, நிறுவனத்தில் மாணவர்களை சேர்க்கப்படும்

போது, ஒருவேளை இணைப்பு மறுக்கப்படும் பட்சத்தில் மாணவர்களுக்கு சாதகமான சமத்துவத்தை உருவாக்குவது அவர்களை கடுமையான பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும். எனவே, இடைக்கால உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல.

15. மாநில அரசு தன்னுடைய தடையில்லா சான்றிதழை வழங்கியும், ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் அதன் சமர்ப்பிப்புகளில், இணைப்பு நடவடிக்கைகளுக்கு சம்மதமும் தெரிவித்துள்ளது. திரு.சி.எஸ். வைத்தியநாதன் அவர்கள், ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைப்பு நடவடிக்கைகளை 10 நாட்களில் மேற்கொள்ளும் என தெரிவித்துள்ளார்.

16. இணைப்பு நடவடிக்கை முடிந்த பின்பு உயர்நீதிமன்றமானது, அனுமதிக்கு விண்ணப்பித்த ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும், இணைப்பு நடவடிக்கைகளின் முடிவுகளை மதிப்பீடு செய்யலாம். அதே நேரத்தில் இடைக்கால உத்தரவானது, இணைப்பு நடவடிக்கைகளை இறுதி முடிவுக்காக நிறுத்திவைக்கப்படுகிறது.

17. அதன்படி கீழ்கண்ட நெறிமுறைகளுடன் இந்த மேல்முறையீட்டுக்களை தீர்மானிக்கின்றோம்.

(i) தெலுங்கானா மாநிலம் அதன் தடையில்லா சான்றிதழை. 01.11.2021 அன்று வழங்கியுள்ளதால், ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது, அதனுடைய

விதிமுறைகளுக்கு உட்பட்டு 10 நாட்களில் இணைப்பு நடவடிக்கையை நிறைவு செய்யவேண்டும்.

(ii) ஜவஹர்லால் நேரு தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இணைப்புச் செயல்முறையை நிறைவு செய்த பிறகு, தெலுங்கானா உயர்நீதிமன்றத்தில் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு மற்றும் மற்ற வசதிகள் குறித்து சரிபார்ப்பு மற்றும் ஆய்வு செய்த பின்பு அதன் முடிவுகளை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்ய வேண்டும்.

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் முடிவடையும் வரை, உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகள் நிறுத்தி வைக்கப்படுகிறது மற்றும்

(iv) இணைப்பு செயல்முறையின் முடிவைப் பொறுத்து, உயர்நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கவும் மற்றும் கருதப்படக்கூடிய வழிகாட்டுதல்களை வழங்கவும் அதிகாரம் உள்ளது.

18. இந்த நீதிமன்றம், எந்த ஒரு கடப்பாடுகளையோ அல்லது வழிகாட்டுதல்களையோ அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தில் அங்கீகாரம், இணைப்பு மற்றும் சேர்க்கைக்காக நிர்ணயித்த கால அளவுகளை மீறுவதற்காக வழங்கவில்லை. அனைத்து இந்திய தொழில்நுட்ப கழகத்தின் படி, கடைசி தேதிக்குள் சேர்க்கையை நிறைவு செய்யவேண்டும் என்பது மட்டுமாகும்

19. இணைக்கப்படும் பல்கலைகழகங்களின் முடிவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் உயர்நீதிமன்றம் தகுந்த உத்தரவை பிறப்பித்துக்கொள்ளலாம். பல்கலைகழகத்தின் முடிவுகள் தெரிவிக்கப்பட்ட பின்பு உயர்நீதிமன்றமானது, புகார்தாரர் நிறுவனங்கள் சார்பாக தகுந்த முடிவுகளை எடுத்துக்கொள்ளலாம்.

20. நிலுவையில் உள்ள விண்ணப்பம், ஏதேனும் இருந்தால், தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."